## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**கணிதம் - தரம் 05 / இரண்டாந் தவணை – வாரம் 7**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

### 6.0 : வடிவங்களும் திண்மங்களும்

- சதுரமுகி, கனவுரு, நான்முகி, உருளை ஆகிய திண்மங்களின் இயல்புகள்.
- இரு பரிமாண வடிவங்களைக் கொண்டு அவற்றை ஆக்குதல்.
- கிடைத்தளம், நிலைக்குத்துத் தளம் ஆகியவற்றை இனங்காண்பார்.





❖ தேடிப் பெற்றுக் கொள்க : மாதிரி உருக்களை ஆக்குவதற்கேற்ற விரிகைப் படங்கள் (பாடநூல் பக்கம் 195, 196, 197, 199, 201) பின்னிணைப்பு

❖ தடித்த காகிதம், பசை(கம்), கத்திரிக்கோல்

I. பின்னிணைப்பிலுள்ள உருவங்களை அச்சுப்பதித்து தடித்த தாளில் வரைந்து வெட்டி ஒட்டி திண்மங்களைப் பெற்றுக் கொள்ள வழிப்படுத்துக.

(முகம் – பக்கம், விளிம்பு – ஓரங்கள், உச்சி – மூலைகள்)

- இத்திண்மங்களின் இயல்புகளை அறிந்து கொள்வார்.

| திண்மங்கள் | விளிம்புகளின் எண்ணிக்கை | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
|  சதுரமுகி | | | |
|  கனவுரு | | | |
|  நான்முகி | | | |
|  உருளை | | | |

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1). சதுரமுகி ஒன்றில் எத்தனை முகங்கள் உள்ளன? ........................................

2). கனவுரு ஒன்றில் எத்தனை விளிம்புகள் உள்ளன? .....................................

3). நான்முகி ஒன்றில் எத்தனை உச்சிக்ள உள்ளன? .......................................

4). உருளை ஒன்றில் எத்தனை வட்ட முகங்கள் உள்ளன? ..............................

5). வளைந்த மேற்பரப்பு கொண்ட திண்மம் எது? ..........................................

6). சதுர வடிவ முகங்கள் 6 உள்ள திண்மப் பொருள் எது? ...........................

7). நான்முகியொன்றில் உள்ள விளிம்புகள் எத்தனை? ..................................


8). கனவுரு ஒன்றில் உள்ள முகங்கள் எத்தனை? ............................................

9). சதுரமுகி, கனவுரு ஆகிய திண்மப் பொருள்களுக்கு உதாரணம் – ......................................

10). உருளை, நான்முகி ஆகிய திண்மப் பொருள்களுக்கு உதாரணம் – ..................................


III. கிடைத்தளங்களையும், நிலைக்குத்துத் தளங்களையும் அறிந்து கொள்வோம்.

உ+ம் – கண்ணாடி குவளைகளில் சம அளவான நீர் நிரப்பப்பட்ட விதம் காட்டப்படுள்ளது.





- இவ்வுருவங்கள் மூலம் நீரின் மட்டம் இருப்பது போன்று அமையும் தளங்கள், **கிடைத்தளங்கள்** எனப்படும்.
- கட்டடம் நிர்மாணித்தல் வேலைகளில் ஈடுபடுவோர் பயன்படுத்தும் **நீர் மட்டம்** இருப்பின் பிள்ளையை பார்ப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

உ+ம் -




இவ்வுருவங்கள் மூலம் சுவர், கதவு,நிலைப்படி போன்றன **நிலைக்குத்துத் தளத்திற்கு** உதாரணங்களாகும் என்பதை விளக்குக. முடியுமாயின் **தூக்குக்குண்டு** ஒன்றை பார்வையிட வழிவகுக்க.

1. கிடைத்தளம் , நிலைக்குத்துத்தளம் என்பவற்றை இனங்காண்க.



2. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| நிலைக்குத்துத் தளம் | கிடைத்தளம் | கிடைத்தளமோ, நிலைக்குத்துத்தளமோ அல்லாத தளம் |
|---|---|---|
| உ+ம் - சுவர் | மேசைப் பலகை | கூரை |
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |